விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 201 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 24 புதன்கிழமை (08.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## சிறைச்சாலை மோதல் சம்பவம் பல பிரிவுகளின் கீழ் விசாரணை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ




(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் பல பிரிவுகளின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று (07) நடைபெற்ற 15ஆம் பக்கம் பார்க்க

### வாரத்தில் 4 நாட்கள் மாத்திரமே

## காங்கேசன்துறை - கொழும்பு ரயில் சேவை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - கொழும்பு ரயில் சேவை வாரத்தில் நான்கு நாட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று வெளியிட்ட சிறப்பு அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

ரயில் பெட்டிகள் இன்மையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நீண்ட இடை 15ஆம் பக்கம் பார்க்க

### நீர்கொழும்பிலிருந்து

## 60 கைதிகள் யாழ். சிறைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் 15ஆம் பக்கம் பார்க்க

### சிறைச்சாலை மோதல்

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் 15ஆம் பக்கம் பார்க்க

### போதைக் கும்பல்களின் மோதலே

# நீர்கொழும்புச் சிறைச்சாலை கலவரத்துக்குக் காரணம்



### பாராளுமன்றில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

- போதைக் கடத்தல் தொடர்பில் இரகசியத் தகவல் வழங்கும் கைதிகளை இலக்கு வைத்துத் தாக்குதல்.
- சி.சி.ரி.வி கமராக்கள் திட்டமிட்டு உடைப்பு.

*(04 ஆம் பக்கம் பார்க்க)*

## சிறைக் கலவரத்தில் உயிரிழந்த அதிகாரிகள்



02ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கிச்சூடு நடத்தாமல் இருந்திருந்தால் பாரிய அசம்பாவிதம் நிகழ்ந்திருக்கும்

### பதில் சிறைச்சாலை ஆணையாளர்



(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தின் போது அதிகாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்தாமல் இருந்திருந்தால் பாரிய அசம்பாவிதம் நிகழ்ந்திருக்கும் எனபதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பிரசாத் ஹேமந்த குமார தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் 15ஆம் பக்கம் பார்க்க

## பெரிய கற்களை சிறை அதிகாரிகளின் தலையில் போட்டுத் தாக்குதல்

### நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலின் பின்னணி வெளியாகியது

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலின் போது பெரிய கற்களை சிறை அதிகாரிகளின் தலையில் போட்டு கைதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் நிலைமை குறித்து பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் சிறைச்சாலைத் தரப்பு பல முக்கிய தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

மோதலில் ஈடுபட்ட கைதிகள், சில அதிகாரிகளின் தலைகள் மீது பெரிய கற்களைப் போட்டுத் தாக்கியுள்ளதாக சிறைச்சாலைச் செய்திகள் தெரிவிக்கின்றன. 04ஆம் பக்கம் பார்க்க

### சிறைக் கலவரத்தைத் தூண்டிய

## "கட்டுவெல்லகம சுரேஷ்" பூஸா சிறைக்கு மாற்றம்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைக் கலவரத்தைத் தூண்டியதாகக் கூறப்படும் 'கட்டுவெல்லகம சுரேஷ்' என்ற சந்தேகநபர் பூஸா சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பாதாள உலகக் குழு உறுப்பினர் கெஹல்பத்ர பத்மேவின் நெருங்கிய கூட்டாளி எனக் கூறப்படும் குறித்த நபர் மீது கூர்மையான ஆயுதங்களால் தாக்குதல், 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறைக்...

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த 5ஆம், 6ஆம் திகதிகளில் இடம்பெற்ற கலவரத்தில் 7 சிறைச்சாலை அதிகாரிகள் உயிரிழந்தனர்.

மரணமடைந்த சிறைச்சாலை உத்தியோத்தர்களின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி எஸ்.ஏ.எஸ். சந்திரவன்ச, எஸ்.டி.எஸ். அபேவன்ச, ஏ.டி.தரங்க, டி.எம்.ஆர்.திலகசிறி, பி.என். என்.தரங்க, டி.டபிள்யூ. புஸ்பகுமார, ஆர்.பி.ஆர், சஞ்சீவ ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள், பிரேத பரிசோதனைகளின் பின்னர் இறுதி மரியாதையைச் செலுத்துவதற்காக பொரளை சிறைச்சாலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

# கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் கடமை

## ஐ.நா வலியுறுத்து

(கொழும்பு)

சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது அரசாங்கத்தின் கடமை என இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-எண்ட்ரே பிராஞ்ச் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை விடுத்துள்ள அறிக்கையில், இந்தத் துயரச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தனது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கைதிகள் அரசின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பின் கீழ் இருந்தவர்கள் என்பதால், சிறைச்சாலை அமைப்பில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் அங்குள்ள கைதிகள் ஆகிய இரு தரப்பினருமே கூடுதல் பாதுகாப்பிற்கு உரித்துடையவர்கள் என்றும், அந்தப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் அடிப்படைப் பொறுப்பாகும் என்றும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், இச்சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக சுயாதீனக் குழுவொன்று நிறுவப்பட்டதை ஐக்கிய நாடுகள் சபை பாராட்டுவதுடன், அக்குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வதிவிட ஒருங்கிணைப்பாளர் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1952 - 03 - 09 |  | 2026 - 07 - 06 |

## விநாயகமூர்த்தி தவமணி

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி மற்றும் இல.43/2, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி தவமணி அவர்கள் கடந்த 06.07.2026 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா - மனோன்மணி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான பூபாலப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும் லோகேஸ்வரன் (பாபு), மஞ்சுளா, கவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிராந்தினி, உமேஸ்காந், வத்சாயினி, விஜய்காந் ஆகியோரின் சிறிய தாயாரும் கிறிஸ்ரினா, மெலனி ஆகியோரின் பெரிய தாயாரும் தேம்பாமலர் (மலர்), செல்வராணி ஆகியோரின் சகோதரியும் குகப்பிரியா, புஸ்பராசா (பாலா), சுரேஸ்குமார், சுதன், எக்ஸிபா, கோபிநாத், நூரியா ஆகியோரின் மாமியாரும் ஜெகநாதன், ரேமி குமாரசாமி, ஆகியோரின் மைத்துனியும் ஹரீஸ், பிரசாயினி, அனுசன், ரதீசன், தர்சாயினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2026) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(2492)

தகவல் : குடும்பத்தினர்
077 927 7643

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் நாகேந்திரம் ருக்மணி

தோற்றம் : 17.11.1941

மறைவு: 20.08.2025

திதி : 08.07.2026

எங்கள் அருமை அம்மாவே!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானடைந்து ஓர் ஆண்டு ஆனாலும்
ஆறாது உங்கள் பிரிவுத் துயர்
நம்பவே முடியவில்லையே
நேற்றுப்போல் இருக்குதம்மா
உங்களிடம் நாம் கழித்த பொழுதுகள்
நிலையற்ற வாழ்வில் நிலையான
உமதன்பை தேடியே உருகுகின்றோம்.
எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீங்கா நினைவில்:
குடும்பத்தினர்

(8000)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் ஆறுமுகம் ஏகானந்தசிவம்

### (மண்டைதீவு - நல்லூர்)



விழுதெறிந்து விருட்சமாய்
நின்ற தருவில், கூடி வாழ்ந்த
உறவுப் பறவைக் கூட்டம் அது

அன்றொருநாள் வெடியோசை
கேட்டதனால், கூட்டம் கலைந்து
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
பறந்த பட்சிகள், இடமறியா
தேசங்களில் வாழ்வதாய் கேள்வி

ஆனாலும் ஒரு பறவை மட்டும்
தன் உறவைத் தேடித் தேடி வந்ததனால்
பாசத்திற்குப் பஞ்சம் ஏதுமில்லை.

அந்தோ!
ஒரு பொழுதில் இடியோசை கேட்கிறது!
என்னே! என்றனர் பலரும்
நம் வீடெலாம் தேடி வந்த
அந்தப் பாசப் பறவை
ஒருகணப் பொழுதில்
வானுலகம் பறந்து போனதாம்

காற்றோடு வந்த அக்கொடும் செய்தி - எம்
குருதியைக் கண்ணீராய் கொட்டிற்று
ஓ! அண்ணாந்து பார்க்கின்றோம்
வானமே! எங்கே எங்கள் பாசத்துப் பறவை

வானம் மௌனமாய்ச் சொல்லியது
உங்களோடு கூடியிருந்த அந்த அற்புதப் பறவை
என்னையும் கடந்து ஏகானந்தத்திற்குள்
எழுந்துபோயிற்று என்செய்வோம் என்றாலும்
ஏக்கமும் ஈடு செய்ய முடியா இழப்புமே எஞ்சின
ஐயனே! சிவனார் திருவடியில் நித்தியமாய் நிலைத்திடுக!
ஓம் சாந்தி!

மண்டைதீவு

நல்லையா குடும்பம்
(குஞ்சையா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜனவரி 1 முதல் ஜூலை 5 வரை

# வீதி விபத்துக்களால் 1,424 பேர் உயிரிழப்பு

**(கொழும்பு)**

**இந்த ஆண்டு இதுவரை நாடு முழுவதும் பதிவான வீதி விபத்துக்களில் மொத்தம் 1,424 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

தேசிய விபத்துத் தடுப்பு வாரம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்பு பணிப்பாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான மனோஜ் ரணகலா இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவரது தகவலின்படி, 2026 ஜனவரி 1 முதல் ஜூலை 5 வரை 1,355 உயிரிழப்பு ஏற்படுத்திய வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன.


2025-ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், வீதி விபத்துகளின் மொத்த எண்ணிக்கை 108-ஆலும், உயிரிழப்புகளின் எண்ணிக்கை 110-ஆலும் அதிகரித்துள்ளது.

இந்த நிலைமை மிகுந்த கவலைக்குரியது என்று குறிப்பிட்ட அவர், வீதி விபத்துகள் அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களாக சாரதிகளின் கவனக்குறைவு, பொறுப்பற்ற முறையில் வாகனம் ஓட்டுதல், அதிவேகம், மோசமான வீதி நிலைமைகள் மற்றும் வாகனங்களைப் போதிய அளவில் பராமரிக்காததால் ஏற்படும் இயந்திரக் கோளாறுகள் ஆகியவை அமைவதாகவும் சுட்டிக்காட்டினார்.

வீதி விபத்துகளில் உயிரிழப்பவர்களில் பாதசாரிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களே அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

பொலிஸ் புள்ளிவிவரங்களின்படி, இவ்வருடத்தில் இதுவரை 488 மோட்டார் சைக்கிள் சாரதிகளும், 484 பாதசாரிகளும் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளனர். (நி)

## டொலரின் விற்பனை விலை வீழ்ச்சி



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள நாணய மாற்று விகிதத் தரவுகளின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை சற்று குறைந்துள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை ரூ. 339.59 ஆக பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலரின் விற்பனை விலை ரூ. 339.88 ஆக காணப்பட்டது.

வெளிநாட்டு நாணய சந்தையின் நகர்வுகள் மற்றும் பொருளாதார காரணிகளுக்கு அமைவாக நாணய மாற்று விகிதங்களில் தினசரி மாற்றங்கள் ஏற்படக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

## டெங்கு நோய் பரவல்

# தற்காலிகமாக மூடப்பட்டது மொரட்டுவ பல்கலைக்கழகம்

(கொழும்பு)

மாணவர்கள் மத்தியில் டெங்கு நோய் வேகமாகப் பரவி வருவதை அடுத்து, மொரட்டுவை பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவு அதிகாரிகளுடன் திங்கட்கிழமை (06) நடத்தப்பட்ட விரிவான ஆலோசனைகளைத் தொடர்ந்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக வளாகத்தினுள் டெங்கு பரவும் அபாயத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட சிரமதான மற்றும் கிருமி நாசினி தெளிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, அண்மையில் பல மாணவர்களுக்கு டெங்கு தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து, கொழும்பு அழகியல் கலைகள் கற்கை பல்கலைக்கழகமும் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ‘அஸ்வெசும’ நலன்புரி திட்டத்தை 2030இல் நிறுத்தத் திட்டம்

## பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவிப்பு



(கொழும்பு)

அடுத்த 2030 ஆம் ஆண்டிற்குள் தற்போதைய "அஸ்வெசும" பயனாளிகள் அனைவரையும் வறுமையிலிருந்து மீட்பதே அரசாங்கத்தின் இலக்காகும் என சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"2030 ஆம் ஆண்டிற்குள் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை முழுமையாக நிறுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எனினும், இந்த திட்டம் முடிவுக்கு வருவதனால் நாட்டில் வறுமை முற்றிலும் ஒழிந்துவிட்டதாக அர்த்தமாகாது. இந்த திட்டம் நிறைவடைந்த பின்னரும் ஏழை மக்கள் இருக்கக்கூடும் என்பதால் தான், அவர்களுக்காக வாழ்வாதார வலுவூட்டல் திட்டங்களை நாம் தற்போது முன்னெடுத்து வருகிறோம்.

வெறும் பண உதவி வழங்குவதோடு மட்டும் நின்றுவிடாமல், பல்வேறு வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாக இந்த மக்களை 2030 ஆம் ஆண்டிற்குள் வறுமைக் கோட்டிலிருந்து மீட்டெடுப்பதே எமது முதன்மை நோக்கமாகும்" என பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ சுட்டிக்காட்டியுள்ளார்.


நலன்புரி நன்மைகள் சபையானது தற்போது அஸ்வெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயற்படுத்துவதற்கு தயாராகி வருகிறது.

இதன் கீழ் ஏழைகள் மற்றும் வறிய குடும்பங்களுக்கு மாத்திரமே கொடுப்பனவுகள் மட்டுப்படுத்தப்படவுள்ளன.

கடந்த 2023 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நலன்புரித் திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் நான்கு பிரிவுகளின் கீழ் சுமார் 1.6 மில்லியன் பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# டெங்கு தடுப்பூசி விரைவில் அறிமுகம்

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

டெங்கு நோய் குறித்து வெளியான அறிக்கைகளின் அடிப்படையில் அடுத்துவரும் நான்கு வாரங்களுக்கு மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார் .

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் டெங்கு நோய்க்காக உருவாக்கப்பட்ட தடுப்பூசியை நாட்டில் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

நாட்டில் இதுவரையில் டெங்கு நோயால் 61,060 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 39 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த மாதத்தின் முதல் 5 நாட்களில் மாத்திரம் 5,663 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் இயக்குநர் கபில கன்னங்கர தெரிவித்தார். (நி)

# நீர்கொழும்பு சிறைச்சாலையில் வன்முறை பொலிஸ்மா அதிபர் விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலை சம்பவம் குறித்து விரிவான விசாரணைக்கு பொலிஸ்மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

2026 ஜூலை 5 மற்றும் 6 ஆகிய திகதிகளில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்த மொத்தம் 17 சிறைச்சாலை அதிகாரிகளும் 88 கைதிகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் 9 சிறைச்சாலை அதிகாரிகளும் 76 கைதிகளும் நீர்கொழும்பு வைத்தியசாலைகளிலும் 8 சிறைச்சாலை அதிகாரிகளும் 12 கைதிகளும் கொழும்பு தேசிய வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவத்தில் 7 சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் 20 கைதிகள் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து உடனடி மற்றும் விரிவான விசாரணையை மேற்கொள்ளுமாறும் அது தொடர்பான விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிணங்க, இவ்வழக்கு தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடமும் (CID) கொழும்பு குற்றப் பிரிவிடமும் (CCD) ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கடைசி நிமிடத்தில் கோல்

## போர்த்துக்கல்லை வீழ்த்தியது ஸ்பெயின்

### உலக கிண்ணத்திலிருந்து கண்ணீருடன் விடைபெற்றார் ரொனால்டோ



உலகக் கிண்ணக் கால்பந்து தொடரின் விறுவிறுப்பான 16 அணிகளுக்கான சுற்று ஆட்டத்தில், போர்த்துக்கல் அணியை 1 - 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஸ்பெயின் அணி காலிறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

போட்டியின் ஆரம்பம் முதலே இரு அணிகளும் பலப்பரீட்சை நடத்தின.

ஸ்பெயின் அணி பந்தைத் தன்வசம் வைத்திருந்து ஆதிக்கம் செலுத்திய போதிலும் போர்த்துக்கல் அணியின் பலமான தற்காப்பு அரணை அவர்களால் உடைக்க முடியவில்லை. இதனால் முதல்பாதி ஆட்டம் கோல் எதுவுமின்றி சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதியில் ஆட்டம் மேலதிக நேரத்தை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், போட்டியின் 90ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் அணியின் மைக்கேல் மெரினோ அதிரடியாக ஒரு கோலை அடித்து போர்த்துக்கல் அணியை அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

இந்த வெற்றியின் மூலம், இவ் உலகக் கிண்ணத் தொடரில் இதுவரை தனக்கு எதிராக எதிரணிகளை ஒரு கோல் கூட அடிக்கவிடாத தனது பலமான தற்காப்பு சாதனையையும் ஸ்பெயின் தக்க வைத்துள்ளது.

இந்த தோல்வியின் மூலம் 41 வயதான நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ கண்ணீருடன் விடைபெறுவதுடன் போர்த்துக்கல் அணியின் 2026 உலகக்கிண்ணக் கனவும் முடிவுக்கு வந்தது.

போட்டிக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ரொனால்டோ, "உலகக் கிண்ணத்திலிருந்து இப்படி வெளியேறுவது வருத்தமளிக்கிறது.

நான் எனது முழுத் திறமையையும் வெளிப்படுத்தினேன். எனது மனசாட்சிக்கு துரோகம் செய்யாமல் விளையாடியிருக்கிறேன். இது எனது கடைசி உலகக் கிண்ணம் என்பதில் மாற்றமில்லை. ஆனால், சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து அவசரமாக எந்தவொரு முடிவையும் நான் எடுக்கமாட்டேன். குடும்பத்துடன் நேரத்தை செலவிட்டு, நிதானமாகவே யோசித்து முடிவெடுப்பேன்" என குறிப்பிட்டுள்ளார். (3)

## பெரிய கற்களை...

பாதுகாப்புப் பிரிவினரின் தகவல்களின்படி, இந்த மோதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆரம்பமாகியுள்ளது.

சிறைச்சாலையினுள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் குழுவினர், அதுகுறித்த தகவல்களை அதிகாரிகளுக்கு வழங்கும் கைதிகளை இலக்கு வைத்து இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இந்த மோதலை "கடுவெல்லேகம சுரேஷ்" என்பவரே முழுமையாக வழிநடத்தியுள்ளார்.

இதன்போது, கொடூரமாகத் தாக்கப்பட்ட வர்ணகுலசூரிய நிலங்க துல்ஷான் (வயது-29) மற்றும் கணேவத்த ஆரச்சிலாகே கயான் சம்பத் ( வயது-31) ஆகிய இரு கைதிகள் உயிரிழந்தனர். இவர்கள் இருவரும் சிறை அதிகாரிகளுக்கு ஒற்றர்களாகச் செயற்பட்டவர்கள் எனக் கூறப்படுகிறது.

பின்னர் பாதுகாப்புப் பிரிவினர் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்து கைதிகளை வார்டுகளுக்குள் அடைத்திருந்தனர். அந்த இடைவெளியில், கைதிகள் சிறைச்சாலை வைத்தியசாலையை உடைத்து, மனநல நோயாளிகளுக்கு வழங்கப்படும் மாத்திரைகள் அனைத்தையும் கொள்ளையடித்துள்ளனர்.

நிலைமை சீரடைந்ததைத் தொடர்ந்து, மறுநாள் (திங்கட்கிழமை) காலை அதிகாரிகளால் கைதிகளுக்கு உணவு வழங்கப்பட்டபோது, சுரேஷின் தரப்பைச் சேர்ந்த ஒருவர், ஒற்றர் தரப்பைச் சேர்ந்த ஒருவரின் கன்னத்தில் அறைந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, சுமார் 100 கைதிகள் ஒன்றுசேர்ந்து அந்த நபரைச் சூழ்ந்து கொடூரமாகத் தாக்கியுள்ளனர்.

இரண்டு சிறை அதிகாரிகள் அந்த கைதியைக் காப்பாற்றி சிறைச்சாலை பிலுள்ள விகாரைப் பகுதிக்கு அழைத்துச் சென்றபோது, தாக்குதல் நடத்திய கைதிகள் அதிகாரிகள் மீதும் கற்களால் எறிந்துள்ளனர்.

இதற்கிடையில் இரு தரப்பு கைதிகளுக்கும் இடையே பயங்கர மோதல் மூண்டது. நிலைமையைக் கட்டுப்படுத்த வந்த பல்லன்சேன சிறைச்சாலையின் புதிய பிரதம ஜெயிலர் மீதும் கைதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பின்னர், முதலில் தாக்கப்பட்ட கைதியை அழைத்துச்சென்ற இரண்டு அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு வந்து, சம்பந்தப்பட்ட அதிகாரியைக் காப்பாற்றினர்.

அவரை வெளியேறும் வழியில் இழுத்துச் சென்றபோது, ஒரு கைதி வந்து முள் போன்ற ஒன்றைக் கொண்டு அந்த இரண்டு அதிகாரிகளில் ஒருவரைத் தாக்க முயன்றார், ஆனால் அது பயனற்றுப் போனது. இது சிறை வளாகத்தில் நடந்திருந்தது.

"சார், இங்கே வராதீர்கள். போய் விடுங்கள்." சிறை அதிகாரிகளுடன் நட்பாக இருந்த கைதிகள் அவர்களை அந்த இடத்திலிருந்து அகற்ற முயன்றனர். ஆனால் மற்றொரு கைதிகள் குழுவும் அவர்களைத் தாக்கியது.

அதன் பின்னர், சிறைச்சாலையின் விரைவு அதிரடிப்படையினர் உள்ளே நுழைந்தபோது, கைதிகள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு கொடூரமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சில அதிகாரிகளின் தலைகளில் பெரிய கற்களை போட்டு தாக்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், சிறைச்சாலையின் பாதுகாப்பு அறை மற்றும் ஆயுதக் களஞ்சிய அறையை உடைத்த கைதிகள், அங்கிருந்த ரீபீட்டர் (Repeater) ரக துப்பாக்கி ஒன்றையும், ரி-56 (T-56) ரக துப்பாக்கி ஒன்றையும் கைப்பற்றி, அதிகாரிகள் மீதும் எதிர்த்தரப்புக் கைதிகள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

பின்னர் இந்த இரு துப்பாக்கிகளும் பாதுகாப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டன. கைதிகள் சிறைச்சாலையின் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ அறையின் கழிவறையைக்கூட அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தியுள்ளனர். இந்தச் சேத விபரங்கள் இதுவரை மதிப்பிடப்படவில்லை.

குறித்த மோதல் சம்பவத்தில் 7 சிறை அதிகாரிகள் உட்பட 27 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நீர்கொழும்புச்...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட சம்பவத்திற்கு திட்டமிட்ட போதைப்பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றக் குழுக்களுக்கு இடையிலான மோதலே காரணம்.

இந்த மோதல்களில் கைதிகள் மற்றும் அதிகாரிகள் உயிரிழந்துள்ளதுடன் பெருமளவிலானோர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தின் பின்னணியில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் திட்டமிட்ட குற்றக் குழுக்களின் சதி உள்ளது.

சிறைச்சாலை நிர்வாகத்திற்கு இரகசியத் தகவல்களை வழங்கிய கைதிகளை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது ஒரு பாரதூரமான மனிதப் பேரவலம். சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோதப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக நாம் கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தோம்.

நிர்வாகத்திற்குத் தகவல் வழங்கிய கைதிகளே முதலில் தாக்கப்பட்டனர். இந்த வன்முறையின் போது, திட்டமிட்ட முறையில் பல மில்லியன் பெறுமதியான அதிநவீன ஸ்கேனர்கள் மற்றும் சிசிடிவி கமராக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. சிறைச்சாலை பாதுகாப்பு கட்டமைப்பை அடியோடு முடக்குவதே இவர்களின் நோக்கமாக இருந்துள்ளது.

மோதலைத் தொடங்கிய கைதிகள் ஆயுதங்களைப் பெற்று, இரும்புக் கதவை உடைத்துக் கொண்டு தப்பிச் செல்ல முயன்றுள்ளது.

ஆயுதமற்ற இரண்டு அதிகாரிகள் தாக்கப்பட்டதாகவும் அவர்களை மீட்பதற்காக மற்ற அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்றதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மேலும், பெரும்பாலான அதிகாரிகள் செங்கற்கள் மற்றும் தடிகளால் கொடூரமாகத் தாக்கப்பட்டதில் உயிரிழந்தனர்.

அரசாங்கம் என்ற வகையில் முழுப் பொறுப்பையும் நாங்கள் ஏற்கின்றோம். சிறைக்குள் போதைக்கு அடிமையானவர்கள் இருந்துள்ளனர். அவர்களே இந்தத் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.

இந்த இடத்தில் கைதி எனவும் அதிகாரி என்றும் தனித்தனியே மதிப்பு வழங்க முடியாது. உயிரைக் காப்பாற்றுவதே எங்கள் நடவடிக்கையாக இருந்தது.

கைதிகளின் கைகளுக்கு ஆயுதங்கள் எப்படிச் சென்றது என்பது குறித்து தற்போது விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்நிலையில் பாதுகாப்புக்காக கைதிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர்கள், எம்.பிக்களுக்கான
# எரிபொருள் கட்டுப்பாடுகள் அதிரடியாக நீக்கம்

(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடியைத் தொடர்ந்து பொதுச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற பொது அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த எரிபொருள் பயன்பாட்டுக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் நீக்கியுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை நிதி அமைச்சின் செயலாளர் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், ஆணையங்கள், அரச திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டரீதியான சபைகளின் தலைவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து எரிபொருள் விலை உயர்வு மற்றும் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தக் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

இதன் ஒரு பகுதியாக, கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் மூலம், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது அதிகாரிகளுக்கான எரிபொருள் கொடுப்பனவுகள் மார்ச் முதலாம் திகதி நிலவிய எரிபொருள் விலையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும், புதிய சுற்றறிக்கையின் மூலம் அந்த உத்தரவு இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், கடந்த ஜூலை முதலாம் திகதி முதல் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற பொது அதிகாரிகளுக்கான எரிபொருள் கொடுப்பனவுகள் சந்தையில் நடைமுறையில் உள்ள எரிபொருள் விலையின் அடிப்படையில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)


## பண்ணையில் பணியாற்றுவதற்கு ஆள் தேவை

முல்லை மாவட்ட சிக்கனக் கடனுதவுச் சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தமான 10 ஏக்கர் பண்ணைக் காணி முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் மல்லிகைத்தீவு கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவில் உள்ளது. அதில் நல்லினக் கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் மரமுந்திரிகை நடும் ஏற்பாடு உள்ளது. இங்கு தங்கி நின்று பணியாற்றத்தக்க வசதிகள் உள்ளது. இதற்கு மாதம் ஒன்றுக்கு 60000.00 சம்பளம் உணவுக்கு என்று 10000.00 மொத்தம் 70000.00 மாதம் வழங்கப்படும். லீவு பெற்றுக்கொள்ளும் நாள்களுக்கு அம்மாதத்திலுள்ள நாட்களால் சம்பளம் பிரித்து கழிக்கப்படும். வேலைக்கு வந்த பின்னர் விலகுவதாயின் மூன்று மாதகால எழுத்து மூலமான முன்னறிவிப்புடனேயே விலக முடியும். பண்ணையிலுள்ள பொறுப்புக்களை முறைப்படி பொறுப்பேற்று விலகும் போது முறைப்படி ஒப்படைத்து விலகுதல் வேண்டும். தங்கள் சம்பளத்தில் நாள் ஒன்றுக்கு 100.00 என்றவாறு எமது வங்கியில் வைப்புச்செய்து விலகும் போது வட்டியுடன் பெற்றுச் செல்ல முடியும். இதற்கு விரும்பமுள்ளவர்கள் **070 212 6196, 024 324 8603, 077 345 9178, 077 345 2720** எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவுச் சங்கங்களின் சமாசம்,**
**ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு.**

(C-5987)


# அமைதியை நிலைநாட்ட முப்படையினருக்கு அழைப்பு



(கொழும்பு)

நாட்டில் பொது அமைதியைப் பேணிப் பாதுகாப்பதற்காக, முப்படைகளின் அனைத்து உறுப்பினர்களையும் குறிப்பிட்ட பிரதேசங்களில் விசேட கடமைகளில் ஈடுபடுத்துமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பிறப்பித்துள்ள அவசர உத்தரவை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தினால் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட உத்தியோகபூர்வ விசேட செய்தியை அவர் பாராளுமன்றத்தில் வாசித்துக் காட்டினார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் பிறப்பிக்கப்பட்டுள்ள இந்தக் கட்டளையானது பாராளுமன்றத்தின் அவசர கவனத்திற்கு கொண்டு வரப்படுவதாக சபாநாயகர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களின் பிரகாரமே, நாட்டின் பொது அமைதியைப் பாதுகாப்பதற்காக இந்த விசேட பிரகடனம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் சபைக்குத் தெரிவித்தார்.

இவ் உத்தரவின் கீழ், பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகிய முப்படைகளின் அனைத்து உறுப்பினர்களும் உடனடியாகப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட அழைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மாவட்டங்கள் மற்றும் பிராந்திய எல்லைகளுக்குள் பொது அமைதியையும், சட்டம் ஒழுங்கையும் சீராகப் பேணுவதற்காகவே முப்படையினர் இவ்வாறு களமிறக்கப்படவுள்ளனர். (நி)


# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

## திருமதி.லலிதாதேவி ரவிதாஸ்

(B.A. PGDE, SLTS-I)



### சேவை விபரம்

- யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்
  19.03.1998-31.12.1998
- யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்
  01.01.1999-16.01-2014
- யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்
  17.01.2014-01.06.2014
- யா/ஸ்கந்தவரோதய கல்லூரி
  02.06.2014-07.07.2026

Congratulations!

கற்றறிந்த இனிய தமிழினை
வித்தாரமாய் விதைத்து
கல்விப்பணியே
கடவுட் பணியென
எண்ணில்லா மாணவர்களுக்கு
எளிதாய்ப் போதித்து
வாழ்வில் ஏற்றமுற உழைத்த
ஆசானின் மணிவிழா இன்றாகும்
ஸ்கந்தா அன்னையின் மடிதனில்
அமைதியுற தனித்தமிழில் உரையாடி
நல் ஆசிரியராய் இணைப்பாளராய்
பகுதித்தலைவராய் உதவி அதிபராய்
பல பதவிகளை அலங்கரித்து
அன்புடனும் பண்புடனும்-எல்லோருடனும்
பழகிய பாங்கு உங்கள் தனித் தன்மையை
மண்ணில் மகத்துவமாய்
மனையாட்சி மிக்கவராய்
இல்லாளும் நாயகியாய்
இனிய மகவுடன்
எந்நாளும் எல்லாமும் பெற்று
பார்புகழ பல்லாண்டு வாழ
மனதார வாழ்த்துகின்றோம்
வாழ்க வளமுடன்!

வாழ்த்துவோர் -
கல்விசார், கல்விசாரா
ஊழியர் நலன்புரிக்கழகம்
யா/ஸ்கந்தவரோதய கல்லூரி

(C-5988)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# TIN இலக்கத்தை ஒன்லைன் மூலம் இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்

## பிராந்திய ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**TIN இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காகப் பொதுமக்கள் நீண்ட வரிசையில் நிற்பதைத் தவிர்த்து, நிகழ்நிலை (Online) முறை மூலம் அதனை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் ஏ.பி.குணதுங்ஹ தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை, உள்நாட்டு இறைவரித் திணைக்களபிராந்திய ஆணையாளர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.



இந்த கலந்துரையாடலில், கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள உள்நாட்டு இறைவரித் திருத்தச்சட்டத்தின்படி, புதிய வங்கிக் கணக்கைத் திறப்பதற்கு, கட்டடத்திட்ட ஒப்புதலைப் பெறுவதற்கு, மோட்டார் வாகனப் பதிவு மற்றும் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு, நிலப் பதிவு அல்லது உரிமை மாற்றத்திற்கு மற்றும் கடன் அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கு TIN இலக்கம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என ஆணையாளர் சுட்டிக்காட்டினார். அத்துடன் ஏற்கனவே பதிவு செய்திருப்பவர்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு சென்று OTP இலக்கத்தைப் பெற்றுத் தங்களது TIN இலக்கத்தைப் பார்வையிட முடியும்.

இதுவரை பதிவு செய்யாதவர்கள், www.ird.gov.lk என்ற இணையத்தளம் மூலமாகவோ அல்லது விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பதிவுகளுக்கான சான்றிதழ்கள் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்றும், மேலதிக விபரங்களுக்கு 021 221 7333 என்ற இலக்கத்தைத் தொடர்புகொள்ளலாம் என்றும் பிராந்திய ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (8)

# தமிழர் வாழ்வியலில் பனை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழி அமைப்பு பெருமையுடன் வழங்கும் , முனைவர் ச. மனோன்மணி (இலங்கை) மற்றும் திருமதி அமுதா அன்பழகன் (சுவிட்சர்லாந்து) ஆகியோர் இணைந்து எழுதிய "தமிழர் வாழ்வியலில் பனை" நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.




யோ.நிவேதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வாழ்த்துரையினை வவுனியாப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வழங்க, நூலினை யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் பூ.ஐங்கரன் வெளியிட்டு வைக்கவுள்ளார்.

வெளியீட்டுரையை நல்லூர் பிரதேசசபை கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீவனும் அறிமுக உரையை வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் ஏற்புரையை முனைவர் ச.மனோன்மணியும் வழங்கவுள்ளனர். (8)

# கண்காட்சி பொருட்கள் அன்பளிப்பு!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சக்தியம்மன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர்களால் முன்னெடுக்கவுள்ள கல்விக் கண்காட்சி நிகழ்விற்குத் தேவையான பொருட்கள் நேற்றைய தினம் ஜெசாக் அமைப்பினால் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை சமூகம் மற்றும் கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன ஜெசாக் அமைப்பிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக மேற்படி உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜெசாக் நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு கல்விக் கண்காட்சிக்கு தேவையான உதவிப் பொருட்களை பாடசாலை சமூகத்திடம் கையளித்திருந்தனர். (8-30)



யா/ வயாவிளான் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் வயவன் அமுத விழாவும் மலர் வெளியீடும் கல்லூரியின் ஆ.சி.நடராஜா மண்டபத்தில் நடைபெற்றது.

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் 50 ஆவது இரத்ததான முகாம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை கருகம்பனை கலாசார மண்பத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக் கொடையாளர்களைக் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு 077 324 1755 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (8)

# கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெல்அறுவடை ஆரம்பம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2026 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெல் அறுவடை ஆரம்பாகியுள்ளது.

மாவட்டத்தில் இரணைமடுக்குளத்தின் கீழ் சுமார் 21 ஆயிரத்து 160 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளது.

தற்பொழுது நெல்அறுவடை நடைபெற்றுவரும் நிலையில் ஏக்கர் ஒன்றிக்கு 20தொடக்கம் 25 மூடைகளே கிடைக்கப் பெறுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போதைய நெல்லின் விலையுடன் ஒப்பிடுகையில் தமக்குப் போதுமான விளைச்சல் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

மேலும் உரங்களின் விலை 14 ஆயிரத்திற்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுவதனாலும் எரிபொருள் விலை அதிகரிப்பால் அறுவடை செய்வதற்கான இயந்திரத்தின் கூலி அதிகரித்துள்ளதாலும் செலவு பன்மடங்கு அதிகரித்துள்ளது.

எனவே உரிய நேரத்தில் நெல்லினைக் கொள்வனவு செய்ய சந்தைப்படுத்தல் சபையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-316)

# இரண்டு கிராம அலுவலர் பிரிவாக கிளிநொச்சி புன்னை நீராவி கிராமம்

## கண்டாவளை பிரதேச செயலர் தெரிவிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னை நீராவி கிராம அலுவலர் பிரிவு இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாக கண்டாவளை பிரதேச செயலளார் பிருந்தாகரன் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக தனி ஒரு கிராம அலுவலர் பிரிவில் 6 கிராமங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் காணப்பட்டன.

இதனால் கிராம ம[illegible] பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இந் நிலையில் கடந்த திங்கட்கிழமை (06) முதல் புன்னை நீராவி கிழக்கு புன்னை நீராவி மேற்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாக பிதேச செய[illegible] (8-316)

# செல்லப்பா சுவாமிகள் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குரு பூசை நிகழ்வு, நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9 மணிக்கு திருமுறை நற்சிந்தனைப் பாடல்கள், பாராயணம் என்பன இடம்பெறும்.

தொடர்ந்து, முற்பகல் 11 மணிக்கு "பல்லோரும் ஏத்த பணிந்து" எனும்தலைப்பில், சமூகசேவையாளர் அ.விக்னேஸ்வரன் சொற்பொழிவாற்றுவார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சேவை நலன் பாராட்டு




திருமதி.

## சிவபாமா சிவகுமார்

(B.com, SLTS-I)

**சேவை விபரம்**

- கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம் 24.11.1994 - 17.04.1996
- கிளி/பளை மத்திய கல்லூரி 18.04.1996 -24.07.1997
- வ/வவுனியா முஸ்லீம் மகா வித்தியாலயம் 25.07.1997-13.01.2000
- தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி 14.01.2000-26.09.2004
- யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் 27.09.2004-09.04.2013
- யா/கோண்டாவில் இந்து கல்லூரி 10.04.2013-18.03.2021
- யா/ உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம் 19.03.2021 - 06.04.2026

எமது பாடசாலையில் 5 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திருமதி.சிவபாமா சிவகுமார் அவர்கள் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :* **ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம்.**

(7992)

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை:- தெல்லிப்பளை உப அலுவலகம்**
**உரிமையாளர் பெயர் :-விக்னேஸ்வரன் ஞானசக்தி**
**விண்ணப்பதாரர் பெயர் :- விக்னேஸ்வரன் ஞானசக்தி**
**முகவரி :- வீமன்காமம் வடக்கு தெல்லிப்பளை.**

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 09, மாவிட்டபுரம் வசாவிளான் வீதி, இலக்கம் 218 இல் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 2026.05.04 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிஸ் செல்வி. கவிதா இராசரத்தினம் அவர்கள் முகதாவில் இலக்கம் 464 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி மூலம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.தனராஜா அவர்களால் அளந்து வரைந்த 3135 இலக்க 2025.12.22 திகதிய நில அளவைப் படத்தில் துண்டு 1 என காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**
வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி, மயிலிட்டி கோவிப்பற்று, வறுத்தலை விளான் இறை "இந்தன்" நிலப்பரப்பு 6 குளி 13.21 இதற்கு எல்லைகள்

**கிழக்கு** :-அழநாகமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
**வடக்கு** :- மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் - விமான நிலைய வீதி
**மேற்கு** :-மிகுதி ஆதனம்
**தெற்கு** :-கணபதிப்பிள்ளை சரவணையின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை விக்னேஸ்வரன் ஞானசக்தி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளி நாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன் ,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(7999)

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

# எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம்- யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 138 சர்வதேச நாடுகளில் 77 வருடங்களாகவும் இலங்கையில் 43 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி வெற்றிடம் : சிறுவர் பராமரிப்பாளர் கற்கை நெறிக்கான பயிற்றுவிப்பாளர் **(Instructor – Child Care Giver)**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்/தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றில் பட்டதாரி/ துறைசார் தகைமை NVQ Level (V) யினை / அதற்கு மேலதிகமான தகைமையினை கொண்டிருத்தல் அவசியம்.
- TVET தரநிலைகளில் பரீட்சயமானதோடு அத்துறை சார்ந்த அனைத்து தகைமை களையும் கொண்டிருப்பதோடு கற்பித்தல் ஆற்றல் மற்றும் குறைந்தது 03 வருட முன் அனுபவத்தையும் கொண்டிருத்தல் அவசியம்.
- கணனி மற்றும் ஆங்கிலமொழியறிவினை கொண்டிருத்தல் கூடுதல் தகைமையாக கருதப்படும்.

குறிப்பு:

**சிறுவர் பராமரிப்பாளராக இந்நிறுவனத்தில் பணிபுரிய ஆர்வமுள்ள 28 வயதிற்குமேற்பட்ட திருமணமாகாத பெண்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

இந்நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 12.07.2026 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

*“SOS Children’s Villages Sri Lanka is committed to promote and protect the children’s rights and therefore, it is expected that every individual expected to join SOS Children’s Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references.”*

(C-5986)

**தொடர்புகளுக்கு:**
**எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம்** தொ.பே: 021-221-1342 / 077-444-2531
**இல:219, நாயன்மார்கட்டு,** மின்னஞ்சல்:jaffna@soscvsrilanka.org
**நல்லூர், யாழ்ப்பாணம்.** careers@soscvsrilanka.org

# யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்ட/ ஏற்படவுள்ள பாடசாலை | பாடசாலை வகை |
|---|---|---|
| 01 | யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை | II |
| 02 | யா/செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை | III |

- **தகைமைகள்:**
  வகை II பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் II** ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இலங்கை அதிபர் சேவை தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம். எனினும் **இலங்கை அதிபர் சேவை தரம் II** ஐச் சேர்ந்தவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் **தரம் III** அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- வகை III பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.
- விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்று வருட காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் தொடர்ச்சியாக 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியுமெனினும் அதிபர் சேவை தர நிலையில் ஏற்படும் பதவியுயர்வின் போது இந்நிபந்தனை பொருந்தாது. (பிரதி, உதவி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது)
- **குறிப்பு:**
  விண்ணப்பிப்போர் மாதிரி விண்ணப்ப படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தங்களின் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக 2026.07.22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **“வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்”** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2026 (II)”** எனக் குறிப்பிடவும்.

**மாலதி முகுந்தன், வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்.**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(C-5985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## காசாவில் ஹமாஸ் அரசு கலைப்பு



(காசா)
போருக்குப் பிந்தைய மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில், காசாவில் தங்கள் அரசை கலைப்பதாக ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு அறிவித்து உள்ளது.

மேற்காசிய நாடான இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தின் காசாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு இடையே, 2023 இல் போர் நடந்தது. அமெரிக்காவின் தலையீட்டில், போர் நிறுத்தம் கடந்தாண்டு அமுலுக்கு வந்தது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, காசா பகுதியில் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள அமைதி வாரியம் உருவாக்கப்பட்டது. ஐ.நா. சபையின் ஆதரவு பெற்ற ஒரு தொழில்நுட்பக் குழு காசாவை நிர்வகிக்க திட்டமிடப்பட்டது.

இதை நடைமுறைப்படுத்தும் வகையில், காசாவின் நிர்வாக அரசைக் கலைக்க முன்வருவதாக ஹமாஸ் அமைப்பு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பை ஹமாஸ் அரசின் ஊடக அலுவலகத் தலைவர் இஸ்மாயில் அல் தவாப்தா வெளியிட்டார்.

ஆனால், போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி ஆயுதங்களை கைவிடுவது, கூட்டு இராணுவ அமைப்பின் பாதுகாப்பை ஏற்பது உள்ளிட்டவை குறித்து ஹமாஸ் தரப்பில் இருந்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

மேலும், ஹமாஸ் அமைப்பின் கீழ்நிலை அதிகாரி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதனால், இது முறையாக செயல்பாட்டுக்கு வருமா என்ற கேள்வியும் எழுந்து உள்ளது. (3)

## தாய்லாந்தில் 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான தங்க மோதிரம் கண்டுபிடிப்பு


(பாங்காக்)
தாய்லாந்தின் பெட்சாபுரி மாகாணத்தில் உள்ள டான் யாய் தாங் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியில் தொல்லியல் துறையினர் தீவிர அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் விவசாய நிலம் ஒன்றில் வெண்கலப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டதை தொடர்ந்து இந்த ஆராய்ச்சி தொடங்கப்பட்டது.

தற்போது அங்கு நடத்தப்பட்ட தோண்டுதல் பணியில், சுமார் 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான 2 அரிய தங்க மோதிரங்கள் மற்றும் மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதில் ஒரு தங்க மோதிரத்தில் இந்தியாவின் பழங்கால "பிராமி" எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. அதில் "பூச நட்சத்திரத்தால் பாதுகாக்கப்பட்டவர்" என்ற வாக்கியம் இடம் பெற்றுள்ளது.

இதன் மூலம், இந்த மோதிரத்திற்கு சொந்தக்காரர் இந்தியாவின் பழங்கால 'வைசியர்' குலத்தைச் சேர்ந்த ஒரு வணிகராக இருக்கலாம் என்று தொல்லியல் துறை நிபுணர்கள் கருதுகின்றனர்.



இந்த அரிய கண்டுபிடிப்பு பண்டைய இந்தியா மற்றும் தாய்லாந்து இடையே இருந்த வர்த்தக தொடர்பை உறுதிப்படுத்தியுள்ளது. (3)

## பிரான்சில் கட்டுக்கடங்காத காட்டுத்தீ ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்



(பாரிஸ்)
தென்மேற்கு பிரான்சில் காட்டுத்தீ கட்டுக்கடங்காமல் பரவி வருவதால், ஸ்பெயின் எல்லைக்கு அருகிலுள்ள சுமார் 24 கிராமங்கள் மற்றும் சிறிய நகரங்களைச் சேர்ந்த 10,000 இற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை விட்டு அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வீசி வரும் பலத்த காற்று, தீயின் வேகத்தை மேலும் அதிகரிக்கக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். பிரான்சின் பெர்பிக்னான் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் தீயை அணைக்கும் பணிகளில் தீயணைப்பு வீரர்களுக்கு உதவ, சைப்ரஸ் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளில் இருந்து நான்கு நீர்வீச்சு விமானங்களை ஐரோப்பிய ஒன்றியம் அனுப்பியுள்ளது.

இது குறித்து ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயென் தனது எக்ஸ் தளத்தில், "ஐரோப்பா எப்போதும் பிரான்சுடன் துணை நிற்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

பிரெஞ்சு பைரனீஸ் மலை அடிவாரத்தில் உள்ள சுமார் 4,600 ஹெக்டேயர் நிலப்பரப்பு இந்தத் தீயினால் கருகி சாம்பலாகியுள்ளது என்று உள்ளூர் அதிகாரி பியர் ரெக்னால்ட் தெரிவித்துள்ளார். இந்த தீவிபத்தில் ஒரு தீயணைப்பு வீரர் உட்பட ஐந்து பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## ஹார்மு... கப்பல்...

சர்வ...

(டெஹ்ரான்) ...
ஓமான் வளை...
நீரிணையை க...
கப்பல்கள் மீ...
தாக்குதல்களை ந...

ஹார்முஸ் நீரிணை வழியாகச் சென்று கொண்டிருந்த வணிகக் கப்பல்கள் மீது, திங்கட்கிழமை இரவு ஈரானின் புரட்சிகரப் படையினர் ஏவுகணைகளை ஏவியதாக, 'ஆக்சியோஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

அ... ஒருவ... காட்டி... அறிக்... தலினா... கக் கப்... மடைந்... ஆன...

## தீவிரமான ர... ஏவுகணைகளின்...



(கீவ்)
உக்ரைனில் பல்வேறு நகரங்களில் ரஷ்யா ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களைக் கொண்டு நடத்திய தாக்குதல்களில் 21 பேர் உயிரிழந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

திங்கட்கிழமை காலை உக்ரைன் தலைமை அரசு சட்டத்தரணி அலுவலகம் வெளியிட்ட தகவலின்படி, உக்ரைன் தலைநகர் கீவ் உட்பட பல நகரங்களில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் இதில் 117 பேர் படு...


காயமடை... மேலும் ... ப்படுகிற... நாள... தொடங்... தல்கள் ... களாக ... இந்தத் ... மாடிக் ... டாங்கள் ... ங்களில் ... டைந்துள்... மீட்பு... னும் ... கின்றன... உட்பட ... மருத்து... அனுமதி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ...மூஸ் நீரிணையை கடக்க முயன்ற
# ...ல்கள் மீது ஈரான் தாக்குதல்
## ...வதேச அரங்கில் மீண்டும் பதற்றம்

(...) ........................

**...ளைகுடா பகுதியில் ஹார்மூஸ் ...ப கடக்க முயன்ற 2 வணிகக் ... மீது ஈரான் ஏவுகணைத் ...ளை நடத்தியுள்ளது.**



அமெரிக்க அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி வெளியான அந்த அறிக்கையின்படி, தாக்குதலினால் இரண்டு வணிகக் கப்பல்கள் பலத்த சேதமடைந்தன.

ஆனால் உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை.

இதற்கிடையில், செவ்வாய்க்கிழமை அதிகாலை ஓமானின் லிமாஹ் பகுதிக்குக் கிழக்கே அடையாளம் தெரியாத ஒரு பொருள் தாக்கியதில் எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல் ஒன்று தீப்பிடித்ததாக பிரிட்டனின் கடல்சார் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

லிமாஹ் பகுதிக்குக் கிழக்கே சுமார் 8 கடல் மைல் தொலைவில் தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்த எண்ணெய் கப்பலின் இடது பக்கத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அதனால் தீ விபத்து ஏற்பட்டதாகவும் ஐக்கிய இராச்சியத்தின் கடல்சார் வர்த்தக நடவடிக்கை களுக்கான அமைப்பு செவ்வாய்க்கிழமை அதிகாலை தெரிவித்தது. (3)

## ...ரஷ்ய தாக்குதல்கள்
## ...ரின்றி தவிக்கும் உக்ரைன்



...காயமடைந்ததாகவும் மேலும் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

நள்ளிரவு வேளையில் தொடங்கிய இந்தத் தாக்குதல்கள் பல மணிநேரங்களாக நீடித்துள்ளன. இந்தத் தாக்குதல்களில் பல மாடிக் குடியிருப்புக் கட்டடங்கள், கட்டட வளாகங்களில் தீ பரவி சேதமடைந்துள்ளன.

மீட்புப் பணிகள் இன்னும் தொடர்ந்து வருகின்றன. குழந்தைகள் உட்பட பொதுமக்கள் பலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என கீவ் பிராந்தியத்தின் இராணுவ நிர்வாகத் தலைவர் திமூர் த்காச்சென்கோ தெரிவித்தார்.

ரஷ்யாவினால் ஏவப்படும் அதிவேக பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல்களை எதிர் கொள்வதற்கும், அவற்றை வான்பரப்பில் வைத்து அழிப்பதற்கும் தேவையான ஏவுகணைகளுக்கு உக்ரைனில் கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக அந்நாட்டு விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்த ஏவுகணைத் தட்டுப்பாடு காரணமாக, கடந்த ஞாயிற்றுக்கிழமை ரஷ்யாவினால் உக்ரைன் மீது ஏவப்பட்ட 23 பாலிஸ்டிக் ஏவுகணைகளை உக்ரைன் இராணுவத்தால் அழிக்க முடியாமல் போயுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)

## வெறும் கைகளுடன் போராட்டம்
# 11 நாட்களின் பின் மகளின் உடலை மீட்ட தந்தை
## வெனிசுலா நிலநடுக்கத்தில் நெகிழ்ச்சி சம்பவம்



(கராகஸ்)

வெனிசுவேலாவில் அண்மையில் ஏற்பட்ட சக்திவாய்ந்த இரட்டை நிலநடுக்கப் பேரிடரில், மீட்புக் குழுவினரின் உதவி கிடைக்காத நிலையில், தந்தை ஒருவர் 11 நாட்களாகத் தனது வெறும் கைகளால் இடிபாடுகளைத் தோண்டி, உயிரிழந்த தனது 12 வயது மகளின் உடலத்தை மீட்டெடுத்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வெனிசுவேலாவின் லா குவைரா பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் நூற்றுக்கணக்கான கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து பெரும் அழிவை ஏற்படுத்தின. இதில் அலெக்சாண்டர் என்ற தந்தையின் பொதுக் குடியிருப்பு வீடும் முழுமையாக இடிந்து வீழ்ந்தது.

இடிபாடுகளுக்குள் அவரது 12 வயது மகள் சிக்கிக் கொண்டார்.

இந்தநிலையில் மீட்புக் குழுவினரின் உதவி கிடைக்காத நிலையில் உறக்கமோ, உணவோ இன்றி திகைத்துப் போயிருந்த குறித்த தந்தை, தனது மகளை எப்படியாவது மீட்டுவிட வேண்டும் என்ற நோக்கில், இடிபாடுகளுக்கு இடையே வெறும் கைகளால் மண்ணையும் கொங்கிரீட் துகள்களையும் தோண்ட ஆரம்பித்தார்.

11 நாட்கள் தொடர்ச்சியாகப் போராடிய அவர், இறுதியாகக் கடந்த ஞாயிற்றுக் கிழமை தனது மகளின் உடலத்தை இடிபாடுகளுக்குள் இருந்து மீட்டுள்ளார்.

சிதைவடைந்த நிலையில் மீட்கப்பட்ட தனது மகளின் உடலத்தை பிளாஸ்டிக் பையில் ஏந்தியவாறு அந்தத் தந்தை கதறியழுத காட்சி இணையத்தில் வெளியாகி சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டித்வா புயலால் பாதிக்கப்பட்ட

# பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் தாமதம்!

## ரவிகரன் எம்.பி சுட்டிக்காட்டு

(மன்னார்)

மன்னார் - மடு கல்வி வலயத்தில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைச் சீர்செய்வதற்குரிய, நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணம் தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் விபரங்கள் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் இணைய வழியில் பதிவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மடு வலயக் கல்விப் பணிப்பாளர், அவ்வாறு இணைய வழியில் பதிவேற்றப்பட்டுள்ள பாடசாலைகளின் பாதிப்புக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் விரைவில் வழங்கப்படுமென வட மாகாண கல்வித்திணைக்களம் தமக்கு அறிவித்தல் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (8)

# ஆண்டு விழாவும் பாலர் தினமும்

(யாழ்ப்பாணம்)

கணபதி படிப்பகத்தின் 59 ஆவது ஆண்டு விழாவும் பாலர் தினவிழாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை மாலை 5.30 மணிக்கு நெடியகாடு திருச் சிற்றம்பலப்பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

கணபதி படிப்பக தலைவர் சி.மதுசூதனன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.வசிகரன் ஸ்ரீ ஜீவராணி கலந்து கொள்ளவுள்ளார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 300 | 200 | 280 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | -- | 220 | -- | 360 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 600 | 550 | 600 | 500 | 800 |
| தக்காளி | 400 | 600 | 500 | 620 | 400 | 400 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 150 | 250 | 200 | 140 |
| கோவா | 200 | 250 | 300 | 250 | 200 | 200 | 150 |
| கரட் | 400 | 360 | 400 | 380 | 400 | 400 | 300 |
| பூசணி | 150 | 200 | 200 | 150 | 200 | 180 | 140 |
| புடோல் | 120 | 150 | 200 | 200 | 200 | 140 | 180 |
| வாழைக்காய் | 150 | 140 | 250 | 200 | 200 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 400 | 400 | 200 | 380 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | -- | 200 | 200 | -- |
| பாகற்காய் | 800 | 1000 | 800 | 800 | 1000 | 800 | 900 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 200 | 400 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 300 | 400 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 350 | 300 | 400 | 350 | 300 | 300 | 150 |
| லீக்ஸ் | 300 | 400 | 300 | 350 | 300 | 320 | 260 |
| பீற்றூட் | 350 | 450 | 500 | 400 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 600 | 500 | 400 | 500 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 450 | 450 | 400 | 350 | 500 | 400 | 450 |
| போஞ்சி | 650 | 500 | 500 | 600 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 200 | -- | 250 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 80 | 70 | -- | 60 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 300 | 500 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 150 | 110 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 450 | 400 | 350 | 400 | -- | 300 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | 300 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 250 | 200 | 200 | 180 | 200 | 200 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | -- | 100 | -- | 60 |
| ஈரப்பலா | 250 | 200 | 100 | -- | 250 | -- | -- |

# யாழ்.போதனா வைத்தியசாலையில்

## குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் தினம்

(யாழ்ப்பாணம்)




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் தினம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் ஆண்டுதோறும் சுமார் 5 ஆயிரம் சுகப்பிரசவங்கள் நடைபெறுகின்றன.

இச்சுகப்பிரசவங்கள் பாதுகாப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறுவதில் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் முக்கியமான மற்றும் மறுக்க முடியாத பங்காற்றுகின்றனர்.அவர்களின் அர்ப்பணிப்பையும் தொழில் முறை சேவையையும் பாராட்டி கௌரவிக்கும் நோக்கில் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் தினம் கொண்டாடப்பட்டதுடன் அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டதாக வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (8)

# இராசிபலன்

08.07.2026
ஆனி 24, புதன்கிழமை
அட்டமி முற்பகல் 8.04 மணிவரை

ரேவதி பிற்பகல் 12.31 மணிவரை
சுப நேரம் 4.28-5.58 மணிவரை
இராகு காலம் 11.58-1.28 மணிவரை
அட்டமி-நவமி

சந்திராஷ்டமம்-
உத்தரம், அத்தம்

வளவன்

**மேஷம்**
வீட்டில் சில மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**கடகம்**
பூர்வீகச் சொத்து சம்மந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, நம்பிக்கைகள் நடைபெறும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உற்சாகமான நாள்.

**துலாம்**
சுற்றத்தின் வரவால் சுகம் கூடும் நாள், அடுத்தவரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்**
நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு

**ரிஷபம்**
ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் வளம் காண வேண்டிய நாள், விலை உயர்ந்த பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**
மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளிப்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்மந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புதிய முயற்சிகள் கை கூடும், ஆன்றோர்களின் சந்திப்புண்டு.

**விருச்சிகம்**
வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கும்பம்**
வியாபர விருந்தியுண்டு, உறவினர் பகை மாறும் பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பர்.

**மிதுனம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி**
பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், வழிபாடு மகத்துவம் தரும், பிரயாண பயமுண்டு , எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு**
பொன்னான எதிர்காலம் அமைய புதிய வழிபிறக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**மீனம்**
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

எந்த தாய்ப்பறவையும் வெறுங்கையோடு வீடு திரும்புவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



யாழ்ப்பாணம் YMCA அமைப்பின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான கருத்தரங்கு YMCA வளாகத்தில் கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் 8 பாடசாலைகளைச் சேர்ந்த 35 மாணவர் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# கிராமிய வாழ்விற்கான ஒளியூட்டல் திட்டம் யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண மக்களின் கண் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட "கிராமிய வாழ்விற்கான ஒளியூட்டல் திட்டத்தின்" யாழ் மாவட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் எம்.மலரவனினால் உருவாக்கப்பட்ட இத்திட்டமானது கிளிநொச்சி மாவட்டத்தை தொடர்ந்து யாழ் மாவட்டத்திலும் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் முதற் கட்டமாக சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்ட நிலையில் இத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வுடன் சுகாதார அதிகாரிகளுக்கான விசேட பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றது. (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்: ரோகினி
1இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Degree, உதவி மாவட்ட மதிப்பீட்டாளர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/17062

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BEd, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/17063

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:Master Degree, Data Analyst (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/17064

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சித்திரை
12 இல் செவ்
கி-பா: 45
உயரம்:5'8"
தகைமை/தொழில:Msc, Bsc, Dietician (UK)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/17066

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
2 இல் செவ்
உயரம்:5'10"
தகைமை/தொழில்: Engineer(Canada)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17067

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 65
7 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS, Doctor (London)
எதிர்பார்ப்பு: Only London
தொ.இ: G/17091

பிறப்பு: 2002 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 7
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L,தையல்
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/17093

பிறப்பு:1998 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா:70
7இல் செவ்
உயரம்: 5'
தகைமை/தொழில்: Degree, Assistat Accountant
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/17094

பிறப்பு: 2000 இந்து
நட்சத்திரம்: பூராடம்
7 இல் சூரி செவ்
கி.பா: 69 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/17097

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்: பூரம்
12 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BEd,Teacher
எதிர்பார்ப்பு - விவாகரத்தானவர்
தொ.இ: G/16590

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 611

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# நட்பின் இலக்கணம்!

ஒருவர் முகத்தை ஒரு மாதிரி கவலையாக வைத்துக்கொண்டு வந்தார். என்ன விடயம் என்று விசாரித்தேன்.

"என்னுடைய நண்பன் ஒருவனுடன் கருத்து வேறுபாடு... இனிமேல் நமக்குள் எந்த சம்பந்தமும் வேண்டாம் என்று நட்பை முறித்துக் கொண்டு வந்து விட்டேன்" என்றார்.

"நண்பர்கள் என்று இருந்தால் கருத்து வேறுபாடு வரத்தான் செய்யும்" என்றேன். "கருத்து வேறுபாடு வராமல் இருப்பதற்கு ஏதாவது வழி உண்டா?" என்று கேட்டார்.

அதைப் பற்றி நிபுணர்கள் சில யோசனைகளைச் சொல்லியிருக்கின்றார்கள் என்றேன்.

முதல் விடயம் என்ன தெரியுமா?

உங்கள் நண்பருக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டும் என்றால் அதை நீங்களே நேரடியாக சொல்லுங்கள். அல்லது உங்கள் கைப்பட கடிதம் எழுதுங்கள்.

அதாவது நேரடித் தொடர்பு முக்கியம். அதை விட்டுவிட்டு இன்னொருத்தர் மூலமாக நண்பர்களுக்குச் செய்தி அனுப்பினால் நீங்கள் சொல்கின்ற செய்தி அப்படியே போய்ச் சேராது.. அது சேதமாகுவதற்கு வாய்ப்பு உண்டு. கூட்டி குறைத்து சொல்லிடுவார்கள். அது குழப்பத்திலே கொண்டு வந்து விட்டுவிடும்.

இரண்டாவது யோசனை: நீங்கள் ஒரு நல்ல காரியத்தைச் செய்யும் போது உங்கள் நண்பரையும் சேர்த்துக்கொள்ளுங்கள். அவருக்கும் அதிலே ஒரு ஈடுபாட்டை உருவாக்குங்கள்.

மூன்றாவது யோசனை: நமக்கு பக்கத்துலே இருக்கின்ற நண்பர் மகிழ்ச்சியடைகின்ற மாதிரி ஏதாவது செய்ய வேண்டும். சின்னச் சின்னச்செயல்களாக இருந்தாலும் பரவாயில்லை. அவர் நமக்கு எதுவும் செய்யவில்லையே, நாம் எதுக்குச் செய்யவேண்டும் என்று நினைக்கக்கூடாது.

நான்காவது யோசனை: உங்களுக்கு ஒரு பிரச்சினையா? அல்லது உங்க நண்பருக்கு ஒரு பிரச்சினையா? எதுவாக இருந்தாலும் இரண்டு பேரும் சேர்ந்து உட்கார்ந்து ஆலோசனை செய்யுங்கள்.

"நமது யோசனையும் கேட்கப்பட்டதே" என்கிற நினைப்பே அவருக்கு ஒரு மனநிறைவை உண்டாக்கும்.

ஐந்தாவது யோசனை: உங்க நண்பர் ஏதோ ஒரு காரியத்தைச் செய்கிறார். நீங்க உடனே அவசரப்பட்டு நீ செய்வது தவறு என்று தீர்ப்பு சொல்லாதீர்கள். அவர் அதைச் செய்வதற்கான நியாயங்கள் எவ்வளவோ இருக்கும். அதைப் புரிந்து கொள்ளுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஆறாவது யோசனை: உங்கள் நண்பர் என்ன சொன்னாலும் அதைப் பொறுமையாக கேளுங்கள். அவர் சொல்லுவதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர் சொல்ல விரும்புவதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர் சொல்ல முடியாமல் தவிப்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இப்படி மூன்று விதமாகவும் அவரைப் புரிந்துகொண்டு அதற்குத் தகுந்த மாதிரி செயற்பட வேண்டும்.

ஏழாவது யோசனை: உங்கள் நண்பர் உங்களிடம் வந்து ஒரு கருத்தைச் சொல்கிறார். அது உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக உடனே நீ சொல்வது சரியில்லை. நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்றெல்லாம் மறுத்துக் கூறக்கூடாது. அவர் சொல்வதைக் கேட்க வேண்டும். பொறுமையாக சிந்திக்க வேண்டும். அதற்குப் பின்பு பதில் சொல்ல வேண்டும்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் நண்பர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு வராது. வல்லுநர்கள் தொகுத்துச் சொல்லியிருக்கின்ற யோசனைகள் இவைகள்!

எனக்குத் தெரிந்த சில நண்பர்கள் உண்டு. அவர்களுக்குள்ளேயும் கருத்து வேறுபாடுகள் வராமல் இருப்பதற்கு சில நுட்பங்களைக் கையாள்வது உண்டு.

ஒருவர் சொன்னார்: "அந்த டாக்டர் சின்ன வயதிலேயிருந்து என்கூட பழகினவர். நாங்கள் இரண்டுபேரும் இணைபிரியாத நண்பர்கள். இருந்தாலும் எனக்கு உடம்புசரியில்லை என்றால் நான் அவரிடம் வைத்தியம் பார்த்து கொள்ள மாட்டேன்!" அப்படி என்று சொன்னார்.

"ஏன் அப்படி?" என்னு கேட்டேன்.

"எங்கள் நட்பு கெடக்கூடாது இல்லையா..அதனாலே தான்!" அப்படி என்றார், அந்த நண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கல்கியின்** பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1082





அர்ச்சனை ஆராதனைகள் முடிந்து இறைவனுடைய பிரசாதங்களும் பெற்றுத் திரும்பும் சமயத்தில், ஆலயத்தார்களைப் பார்த்து இளவரசர் "இந்தக் கோயிலின் இறைவருக்குத் தியாகராஜர் என்று ஏன் பெயர் வந்தது?" என்று கேட்டார்.

தேவர்களுக்குள் மகாதேவரும், மூவர்களில் முதல்வருமான சிவபெருமான் மூன்று உலகங்களிலும் வாழும் உயிர்கள் உய்யும் பொருட்டுச் செய்த தியாகங்களை ஆலயத்தார் எடுத்துச் சொன்னார்கள். மூன்று உலகங்களையும் ஆக்கவும், அழிக்கவும் வல்ல பெருமான் தம்முடைய பக்தர்களுக்கு அருள் புரியுமாறு மேற்கொண்ட கஷ்டங்களைப் பற்றிக் கூறினார்கள். உயிர்கள் உய்யும் பொருட்டுத் தவக்கோலம் பூண்டு மயானத்தில் தவம் புரிந்ததைப் பற்றிச் சொன்னார்கள்.

அந்தத் தவத்தையும் கைவிட்டுத் தேவர்களின் நன்மைக்காக உமையை மணந்தது பற்றிக் கூறினார்கள். எல்லா உலகங்களும் இறைவர், பிக்ஷாடன மூர்த்தியாகத் தோன்றிப் பிச்சை எடுத்த வரலாற்றைக் கூறினார்கள். தில்லை அம்பலத்தில் வந்து ஆடியது பற்றிச் சொன்னார்கள். பிட்டுக்கு மண் சுமந்து பாண்டிய மன்னனிடம் பிரம்பினால் அடிபட்டது பற்றியும் கூறினார்கள்.

அத்தகைய தியாகராஜப் பெருமான், கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருஆரூரில் பழைய காலத்தில் அருள்மொழிவர்மரின் முன்னோர்கள் வசித்து வந்ததையும், மனுநீதிச் சோழன் பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டுத் தன் அருமை மகனையே தியாகம் செய்த அற்புதத்தையும் நினைவூட்டினார்கள்.

இவையெல்லாம் அருள்மொழிவர்மரின் உள்ளத்தில் நன்கு பதிந்தன. இதுகாறும் புத்த பகவானுடைய தியாகத்தை நினைந்து நினைந்து வியந்து கொண்டிருந்த இளவரசர், தேவ தேவரான சிவபெருமானைத் தியாக மூர்த்தியாகச் சித்தரிக்கும் வரலாறுகளைப் பற்றி எண்ணி எண்ணி வியக்கத் தொடங்கினார்.

மேலைத் தேசங்களிலே கடவுளின் திருப்புதல்வராகப் போற்றப்படும், அவதார புருஷர் மக்களின் நலத்துக்காகச் சிலுவையில் அறையப்பட்டு மாண்டார் என்ற வரலாறும் அவர் காதுக்கு எட்டியிருந்தது.

இவற்றையெல்லாம் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க, மனிதனுக்குத் தெய்வத் தன்மை அளிக்கக் கூடியது தியாகந்தான் என்னும் எண்ணம் அவர் மனதில் வேர் ஊன்றியது.

ஆதலின் அவரைச் சூழ்ந்துள்ள மக்கள் அனைவரும் தம் மீதுள்ள அன்பின் மிகுதியினால் தம்மைத் தஞ்சைச் சிங்காதனத்தில் அமர்த்திப் பட்டம் சூட்ட விரும்புவது பற்றி அவர் மனம் அளவில்லாத வேதனை அடைந்தது. இவர்களுடைய அன்புச் சிறையிலிருந்து தப்புவது எப்படி என்பது பற்றியும் தீவிரமாக யோசிக்கலானார்.

ஆலய வழிபாட்டுக்குப் பிறகு திருஆரூர் மக்கள் இளவரசருக்குப் பெருவிருந்து அளித்தார்கள். அவரை உபசரிக்கும் பொருட்டுப் பற்பல கேளிக்கைகளை நடத்தினார்கள். அவற்றிலெல்லாம் இளவரசரின் உள்ளம் ஈடுபடாவிட்டாலும் வெளிப்படையாக உற்சாகம் காட்டி ஏற்றுக் கொண்டார்.


பின்னர் ஏறக்குறைய நடுநிசியில் இளவரசர் சோழ மாளிகைக்கு வந்து சேர்ந்தார். அங்கே சில விபரீதமான செய்திகள் காத்திருந்தன.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பாசமுள்ள நாய்க்குட்டி



எனக்குச் சின்ன வயதிலிருந்தே அழகான பறவைகள் விலங்குகள் என்றால் மிகப் பிடிக்கும்.

பச்சைக் கிளி, அணில், புறா, சிட்டுக் குருவி இவற்றைப் பார்க்கும் போது என் மனம் இன்பத்தால் துள்ளிக் குதிக்கும். பூனைக் குட்டிகளைக் கண்டால் எனக்கு மிகுந்த ஆசை. ஆனால் வீட்டில் பூனை வளர்க்கக் கூடாதென்று பெரியவர்கள் சொன்னதால் விட்டு விட்டேன்.

நாய்க்குட்டி ஒன்று தெருவில் கிடந்தது. அழகான நாய்க்குட்டி! அதை நான் வீட்டுக்குத் தூக்கி வந்தேன். அம்மா அதை வெளியே தூக்கி எறியும்படி கூறினாள். ஆனால் அப்பா தான், 'ஆசையாக இருக்கிறான் வைத்துக் கொள்ளட்டுமே' என்றார்.

அந்த நாய்க்குட்டியை நான் அன்பாக வளர்த்து வந்தேன். அதற்குக் கண்ணன் என்று பெயரிட்டேன். 'கண்ணா கண்ணா' என்று அன்பாகக் கூப்பிடுவேன்.

முதன் முதலில் என் சிறு வயதில் நான் வளர்த்த அந்த நாய்க்குட்டி தெருநாய் இனத்தைச் சேர்ந்தது தான். ஆனாலும் எவ்வளவு அருமையான நாய்! அறிவுள்ள நாய்! நன்றியுள்ள நாய்! அதை இன்று நினைத்தாலும் எனக்குப் பெருமையாக இருக்கிறது. அது நண்பனைப் போல் பழகியது. குழந்தையைப் போல் வளர்ந்தது. காவல் வீரனைப் போல் கடமை ஆற்றியது. வீட்டுக்கு மிகப் பயன் உள்ள ஓர் உயிரினமாகி விட்டது.

வீட்டுக்கு உறவினர்கள் வந்தால் வாலை ஆட்டிக் கொண்டு அவர்களைச் சுற்றிச் சுற்றி வரும். குழந்தைகள் வந்தால் அவர்களோடு ஓடியாடி விளையாடும். வேற்று ஆட்கள் வந்தால் உறுமி உறுமிப் பாயும். பிச்சைக்காரர்கள், ஊர்க்காலிகள் யாரேனும் தெரு முனையில் வந்தால் கூட பெருங்குரல் கொடுத்துக் குரைக்கத் தொடங்கிவிடும். அதற்குரிய தட்டில் வைக்கும் உணவைத் தான் சாப்பிடும். வேறு பொருள்களில் வாய் வைக்காது. மாலையில் நான் வெளியில் செல்லும் போது கூடவே ஓடி வரும்.

நீண்டநாட்கள் அது எங்கள் வீட்டில் இருந்தது. ஒரு நாள் நோயுற்றுப் படுத்தது. கால் நடை மருத்துவரிடம் கொண்டு போய்க் காண்பித்தேன். மருந்துகளால் அதை ஒரு வாரம் வரைதான் காப்பாற்ற முடிந்தது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன.

– *சுவாமி விவேகானந்தர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூட்டை உடைத்ததால் கலைந்து கொட்டுகிறது கருங்குளவிக் கூட்டம்

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே ஏற்பட்ட கடும் மோதல் 27 உயிர்களைக் காவு கொண்டுள்ளது. இதில் சிறை அதிகாரிகள் ஏழு பேர் என்பது குறித்துரைக்கப்பட வேண்டிய தகவல்.

ஆம், இலங்கையின் வரலாற்றில் இடம்பெற்ற சிறைச்சாலைக் கலவரங்களில் முன்பு ஒருபோதும் இல்லாத அளவில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

தவிர, நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மேற்படி மோதல் சம்பவம் பிரபலமான உலக ஊடகங்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இங்குதான் நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகள் இவ்வாறு மோதிக்கொள்ள வேண்டிய தேவை என்ன? என்ற கேள்வி எழுகிறது.

ஆம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் போதை ஒழிப்பு நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளதுடன் போதைப்பொருள் வர்த்தகத்தில் சர்வதேச வலைப்பின்னலுடன் இணைந்துள்ள பாதாள உலகக் கோஷ்டிகளை தேடித் தேடிப் பிடித்து அவர்களைக் கைது செய்வதனால், பாதாள உலகக் கோஷ்டி அதிர்ந்து போயுள்ளது.

அதாவது, பலம் வாய்ந்த உலக நாடுகளின் பொருளாதாரத்துடன் ஒப்பிட்டுக் கூறக்கூடிய அளவில், பொருளாதார பலம் மிக்க உலகப் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய – வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கையர்கள் அந்தந்த நாடுகளில் வைத்துக் கைது செய்யப்படுகின்றனர். இவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

தவிர, இத்தகைய பாதாள உலகக் குழுவுக்கும் இந்த நாட்டின் கடந்த கால ஆட்சியாளர்கள் சிலருக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் உண்டென்பதால், போதைப்பொருள் வர்த்தகர்கள் கைதாகும் படலம், குறித்த தரப்புகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆம், போதைப்பொருள் வர்த்தகர்களின் கைது இலங்கைத் தீவில் போதைக் கடத்தலின் பின்னணியில் இருந்த அரசியலை – அதிகார உயர் மட்டங்களை காட்டிக் கொடுக்கப் போகின்றதே என்ற ஏக்கமும் இப்படியே நிலைமை போனால், போதை வர்த்தகம் முழுமையாகக் கந்தறுந்து விடும் என்ற ஆத்திரமும் மேலிட, அதிர்ந்து போனவர்கள் நீர்கொழும்பு சிறைச்சாலையில் மோதலை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

அதிலும் சிறைச்சாலைக்குள் நடைபெறுகின்ற போதைவஸ்துக்களின் பரிமாற்றம் குறித்த, தகவல்களை வழங்கிய கைதிகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் என்பது, குளவிக் கூடுகள் உடைக்கப்பட்டதனால் ஆத்திரம் கொண்ட கருங்குளவிகள் கண்டபாட்டில் கொட்டித் தள்ளியது போலவே நீர்கொழும்பு சிறைச்சாலையில் நடந்த மோதல் சம்பவமும் அமைகிறது.

# வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் காணிகளை தொல்லியல் திணைக்களம் அபகரிக்கவில்லை

## அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் காணிகளை தொல்லியல் திணைக்களம் பலவந்தமான முறையில் கையகப்படுத்தவில்லை என்று மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களின் பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (7) நடைபெற்ற தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

கடந்த காலங்களில் அரச ஆதரவுடன் தொல்லியல் சின்னங்கள் மற்றும் புராதன சின்னங்கள் அழிக்கப்பட்டன. தொல்லியல் புதையல்களும் கொள்ளையடிக்கப்பட்டன. அவ்வாறான நிலைமை தற்போது கிடையாது. மிகுதியாக உள்ள தொல்லியல் சின்னங்களையாவது எதிர்கால தலைமுறையினருக்காவது பாதுகாக்க வேண்டும்.

கடந்த கால முறையற்ற நிர்வாகத்தின் நிழலில் இன்றும் வாழ்பவர்கள் இனவாதம் மற்றும் மதவாத முரண்பாடுகளை ஏற்படுத்த தொல்லியல் சின்னங்களை திட்டமிட்ட வகையில் அழிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். அதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது. தொல்லியல் சின்னங்கள் குறித்து தகவல் வழங்குபவர்களுக்கு சன்மானம் வழங்கும் வகையில் ஒழுங்குவிதிகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களின் காணிகள் தொல்லியல் திணைக்களத்துக்காக கையகப்படுத்தப்படுவதாக வடக்கு மாகாண எம்.பி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இது முற்றிலும் தவறானது. தொல்லியல் திணைக்களத்துக்காக மக்களின் காணிகள் கையகப்படுத்தப்படவில்லை.

வனஜீவராசிகள் திணைக்களம், வனவளத்துறை திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றில் உள்ள தொல்லியல் சின்னங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. இது ஒரு மதத்துக்கோ அல்லது இனத்துக்கோ மாத்திரம் வரையறுக்கப்பட்டதொரு செயற்பாடல்ல என்றார். (ம-7)

## நாடகவியலாளர் பாலேந்திராவின் "ஜீவநதி" சிறப்பிதழ் ஒரு பார்வை

இலங்கையில் மேடை நாடகத் துறையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றிய க. பாலேந்திரா அவர்களின் கலைப் பணிகளைச் சிறப்பித்து வெளியிடப்பட்ட 'ஜீவநதி' சிறப்பிதழ் பற்றிய கருத்தமர்வு இன்று (08) புதன்கிழமை மாலை 04.00 மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர்மடம், அம்மன் வீதியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் கந்தையா ஸ்ரீ கணேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், யாழ் கல்வி வலய நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஜோ.யோண்சன் ராஜ்குமார், சட்டத்தரணி சோ.தேவராஜா மற்றும் தவபாலசிங்கம் துலக்ஷன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக நாடகவியலாளர் க.பாலேந்திரா மற்றும் திருமதி ஆனந்தராணி பாலேந்திரா ஆகியோரின் நாடக எழுத்துரு வாசிப்பும் அதற்கான பதில் அளிக்கையும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## புலமைப்பரிசில் கருத்தமர்வு

தென்மராட்சி வரணிப் பிரதேச தரம் 05 மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கொன்று இன்று (8) புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வளவாளர்களாக வரணி ஆசிரிய வாண்மைவிருத்தி நிலைய முகாமையாளர் திருமதி ம.சிவநேசனும் யா/குடமியன் அ.த.க பாடசாலை அதிபர் செ.மதனரூபனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-7,30)

## ரயில் தடம்புரள்வு

கோட்டை ரயில் நிலையத்திலிருந்து ரம்புக்கனை நோக்கிப் பயணிக்கவிருந்த ரயில் தடம் புரண்டுள்ளது.

இச் சம்பவமானது நேற்று செவ்வாய்க்கிழமை (07) பிற்பகல் 4.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ரயில் கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்தின் மேடைக்கு அருகில் வந்துகொண்டிருந்த போது ரயிலின் பெட்டியொன்று தடம் புரண்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்தின் நான்கு ரயில் மேடைகள் பாதி க்கப்பட்டுள்ளது அத்துடன் கொழும்பு கோட்டையிலிருந்து ஆரம்பமாகும் பல ரயில் சேவைகளில் தாமதங்கள் ஏற்படக்கூடும் என ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## 88 இலட்சம் நட்டஈடு மோசடி

## சஷீந்திர ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றப் பத்திரிகை

88 இலட்சம் ரூபா நஷ்டஈடு மோசடி தொடர்பில் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்தக் குற்றப் பத்திரிகைகள் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில் கையளிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தலா பத்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் பிரதிவாதிகளை விடுதலை செய்த நீதிபதி, வெளிநாட்டுப் பயணத் தடையை விதித்ததோடு பிரதிவாதிகளின் கைரேகைகளைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (ம-7)

## வருகிறது எல்நினோ காலநிலை வியூகம் வகுக்கிறது இலங்கை

(கொழும்பு)

இவ்வாண்டின் இறுதிப் பகுதி முதல் ஏற்படக்கூடிய எல்நினோ தாக்கங்களை எதிர்கொள்ளும் வகையில் அரசாங்கம் துரித நடவடிக்கையை எடுத்துள்ளது.

அதன் பிரகாரம் ஜனாதிபதியால் எல்நினோ நிலைமையால் ஏற்படக்கூடிய நீர், மின்சாரம் மற்றும் உணவு நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்வதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், பொது மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கும் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தம்மிக்க பட்டபெதி தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொல்பொருள் தளங்களை பாதுகாக்க விசேட திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் தொல் பொருளியல் வாரத்தின் ஆரம்பத்தை முன்னிட்டு, நாடு தழுவிய ரீதியில் உள்ள 1,000 தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத் திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்தத் தேசிய திட்டத்தின் முதற்கட்டமாக, அடையாளம் காணப்பட்ட 100 முக்கியமான தொல்பொருள் தளங்களைப் பாதுகாப்பதில் முதன்மைக் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இடங்களில் அகழ்வாராய்ச்சி, முறையான ஆய்வுகள் மற்றும் பராமரிப்புப் பணிகளைத் துரிதப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், பொது மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் நோக்கில், "சமூகப் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளும் தொல்பொருள் திணைக்களத்தின் நேரடி வழிகாட்டுதலின் கீழ் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கேரளாவில் நிலச்சரிவு

- இருவர் உயிரிழப்பு
- பலர் மாயம்
- மீட்பு பணிகள் தீவிரம்



(டில்லி)

கேரளாவின் வயநாடு பகுதியில் நேற்று ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் மாயமாகியுள்ளனர்.

மெப்பாடிக்கு அருகிலுள்ள கல்லாடி பகுதியில் ஏற்பட்ட இந்த மண்சரிவு அங்கு நடைபெற்று வந்த சுரங்கப் பாதை கட்டுமானப் பணியைப் பாதித்ததில் பல தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர்.

இவர்களில் ஏழு பேர் இன்னும் காணாமல் போயுள்ளதாக, முதல்வர் வி.டி. சதீசனை மேற்கோள் காட்டி பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் தகவலின்படி, மலப்புரம் மற்றும் வயநாடு மாவட்டங்களை இணைக்கும் சுரங்கப் பாதை திட்டத்திற்காக அந்தத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.

மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தேசிய பேரிடர் மீட்புப் படை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, காவல்துறை, வனத்துறை ஊழியர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் ஆகியோர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கனமழை தொடர்ந்து பெய்து வருவதால், பேரிடர் நடந்த இடத்திற்கு அருகில் வசிக்கும் மக்களை வெளியேற்றும் பணியை மாவட்ட நிர்வாகம் தொடங்கியுள்ளது.

அப்பகுதிக்கு அருகிலுள்ள குடியிருப்புப் பகுதியில் வசித்த குடும்பங்கள் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டதாக பிடிஐ செய்தி வெளியிட்டுள்ளது. இப்பகுதிக்கு இந்திய வானிலை ஆய்வு நிலையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# நாமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

கிரிஷ் ஒப்பந்தம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நவம்பர் 16 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது, இந்த வழக்குடன் தொடர்புடைய இரு இந்தியாவைச் சேர்ந்த சாட்சிகளுக்கு, வெளிநாட்டு சாட்சிகளுக்கு அழைப்பாணை விடுக்கும் விசேட சட்ட நடைமுறையின் கீழ் நீதிமன்ற அழைப்பாணைகளை அனுப்புமாறு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வழக்கின் மேலதிக விசாரணைகளை எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதிமன்றம் அறிவித்தது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3376

லிவினேஷ்




மது





சத்யா





சதீஸ்




தரணித்




லக்ஷித்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60 கைதிகள்...

தொடர்ந்து அங்கிருந்த கைதிகளில் 60 பேர் நேற்று யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த இரு தினங்களாகக் கைதிகளுக்கு இடையில் இடம்பெற்ற பயங்கர மோதல்களில் சிறைக் காவலர்கள் உட்பட 27 பேர் உயிரிழந்துள்ளமையுடன் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

இதன் காரணமாக அங்குள்ள கைதிகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கிலும் நீர்கொழும்பு சிறையிலுள்ள கைதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளுக்குப் பிரித்து அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இந்த அவசர இடமாற்ற நடவடிக்கையின் அடிப்படையிலேயே பலத்த பாதுகாப்புடன் 60 கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். (ம-7,33)

## மனித உரிமைகள்...

விசேட விசாரணை ஒன்றை நடத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணையை நடத்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நேற்று முன்தினம் (06) நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு தமது அதிகாரிகள் குழுவொன்றை அனுப்பிய போதிலும் அங்கு நிலவிய அமைதியற்ற சூழல் காரணமாக விசாரணைகளை ஆரம்பிக்க முடியாமல் போயுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் சில நாட்களில் நீர்கொழும்பு சிறைச்சாலைக்குச் சென்று குறித்த சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக நிமல் ஜி. புஞ்சிஹேவா மேலும் தெரிவித்தார். (ம-7)

## காங்கேசன்துறை...

வெளிக்குப் பின்னர் கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான யாழ்.தேவி சேவை மே 11 முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன் துறைக்கான தொடருந்து சேவைகள் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அத்தோடு காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டைக்கான சேவைகள் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## "கட்டுவெல்லகம...

கொள்ளை, போதைப்பொருள் வைத்திருத்தல் மற்றும் விற்பனை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2016ஆம் ஆண்டு நாரம்மல பகுதியிலுள்ள கோவில் ஒன்றில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பிலும் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும் அவருக்கு எதிரான வழக்குகள் நீர்கொழும்பு நீதிமன்றங்களில் விசாரணையிலுள்ளன. (ம-7)

## சிறைச்சாலை...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள விதம் குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விளக்குகையில்,

இந்தச் சம்பவம் குறித்து ஏற்கெனவே பல பிரிவுகளின் கீழ் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அதில் ஒன்றாக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவர், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி ஒருவர் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவர் ஆகியோரைக் கொண்ட மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்க [illegible]

நேற்று அமைச்சரவையில் தீர்மானித்தோம்

அத்தோடு மினுவாங்கொடை பொலிஸாரும் கொழும்பு குற்றவியல் பிரிவினரும் தனியாக ஒரு விசாரணையை நடத்தி வருகின்றனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றுமொரு தனி விசாரணையை முன்னெடுத்து வருகிறது.

மறுபுறம் சிறைச்சாலைத் தரப்பினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த அனைத்து அறிக்கைகளின் மூலமே இறுதி வடிவில் இச்சம்பவம் குறித்த முழுமையான விபரம் வெளிச்சத்திற்கு வரும் என்றார். (ம-7)

## துப்பாக்கிச்சூடு...

பரவி வரும், பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நுழைவாயிலின் ஊடாக துப்பாக்கிச் சூடு நடத்தும் காணொளித் தொகுப்பு குறித்து நேற்று ஊடகங்களுக்குக் விளக்கமளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிறைச்சாலைகளின் பாதுகாப்பு ஒழுங்குமுறைகளின்படி இரண்டு பிரதான நுழைவாயில்கள் காணப்படுகின்றன. முதலாவதாக இரும்பினாலான நுழைவாயிலும் இரண்டாவதாக பலகையினாலான நுழைவாயிலும் அமைந்துள்ளன.

இந்த இரண்டு நுழைவாயில்களுக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே உடற்பரிசோதனை மற்றும் பொதிகள் பரிசோதனைக்கான ஸ்கேனிங் இயந்திரங்கள் மற்றும் தொடர்பாடல் வலையமைப்புகள் உள்ளிட்ட பல பெறுமதிமிக்க உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தின் போது, கைதிகள் முதலாவது இரும்பு நுழைவாயிலை முழுமையாக உடைத்துக் கொண்டு, அடுத்ததாக உள்ள பலகையினாலான நுழைவாயிலை நோக்கி வந்துள்ளனர்.

அந்த பலகை நுழைவாயிலையும் உடைத்துக் கொண்டு அவர்கள் வெளியில் தப்பியிருந்தால், சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கக் கூடிய விபரீதங்களையும் அழிவுகளையும் இந்தத் தருணத்தில் மதிப்பிடவே முடியாது.

அதிகாரிகள் தங்களது உயிரைப் பணையம் வைத்து அந்த நேரத்தில் அவ்வாறு செயற்படாமல் இருந்திருந் [illegible] பாரிய அசம்பாவிதம் நிகழ்ந்திருக்கும்.

சமூக ஊடகங்களில் பரவும் காணொளியில், அதிகாரி ஒருவர் பலகையினாலான நுழைவாயிலில் உள்ள சிறிய துவாரத்தின் ஊடாக துப்பாக்கிச் சூடு நடத்துவது மட்டுமே வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்குத் தெரிகிறது.

ஆனால் அதற்குள் இரும்பு நுழைவாயிலை உடைத்துக் கொண்டு கைதிகள் பலகையினாலான நுழைவாயில் வரை வந்துவிட்டனர் என்பதே உண்மை நிலையாகும்.

மேலும் அந்தத் தருணத்தில் கலவரத்தைத் தணிப்பதற்காக உள்ளே சென்ற எமது சிறைச்சாலை அதிகாரிகள் பலரும் கைதிகளுக்கு இடையே சிக்கியிருந்ததோடு, அவர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

எனவே நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே அதிகாரிகள் அந்தப் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியேற்பட்டது என பதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பிரசாத் ஹேமந்த குமார தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 6241
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
A 9 4 2 2 3 3
அத சம்பத
A 2 2 3 3
சீட்டிழுப்பு இலக்கம் 0816

சுப தவசக்
திகதி 2026.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 8357
தனுசு 12 33 53
1074

தன நிதானய
திகதி - 2026.07.07
சீட்டிழுப்பு இலக்கம் - 2271
Z 17 30 64 70 Z
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

மெகா பவர்
திகதி 07/07/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2589
J 01 01 39 75 80

ஜய
திகதி 2026.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 0509
T 7 5 8 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4483
சீட்டிழுப்பு திகதி 07.07.2026
K 32 38 46 57

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 1550
இடபம் 30 38 41 55 இடபம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
07.07.2026 வெற்றி வாரம் 0949
ஆங்கில எழுத்து T
மற்றும் வெற்றி இலக்கம் 2 6 8 9 2 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,388,258.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3215
25000 பணப் பரிசு 65871
சீட்டிழுப்பு திகதி 2026.07.07 தினம் செவ்வாய்க்கிழமை
38 42 53 68 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,262,405.60

சனிதா
திகதி 07.07.2026 வெற்றி வாரம் 5376
26 30 38 50 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,978,384.00
96845

சசிரி
வெற்றி வாரம் 1045
சீட்டிழுப்பு திகதி 07.07.2026
செவ்வாய்க்கிழமை
03 10 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,122,200.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4927
சீட்டிழுப்பு திகதி 07.07.2026 தினம் செவ்வாய்க்கிழமை
09 26 31 48 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,314,441.60

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 04 10 40 47 62
2391
07.07.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.310,553,651.00


அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 3041
சீட்டிழுப்பு திகதி 2026.07.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,907,836.00
21 36 53 56 Z


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2ம் ஆண்டு

எங்கள் அன்பு அப்பாவின்

# நினைவு நாள்



மலர்வு 09 - 11 - 1946

உதிர்வு 29 - 06 - 2024

## அமரர் பொன்னுத்துரை சந்திரலிங்கம்

அதிகாலை நான்கு மணிக்கு அலாரம்
இல்லாமல் எழுந்துவிடுவார்
ஐந்து நிமிடத்தில் காக்கா குளியல்
குளித்து வந்தவுடன் தலை சீவி பவுடர் பூசுவார்
விளக்கேற்றி சாமி கும்பிட்டு நெற்றியில்
திருநீறும் அணிந்து கொள்ளுவார்
டிவியில் காலை செய்தி பார்த்து விட்டு
அன்றைய பத்திரிகையும் படித்து விடுவார்
மனைவியின் கையால் சீனி போட்ட தேநீர்
தேநீரோடு பலகாரம் சாப்பிடுவார்
முழுக்கை சட்டை, சட்டைப்பையில் ஒரு பேனா,
சப்பாத்து அணிந்து வேலைக்கு செல்வார்
புன்முறுவலோடு உந்துருளியில் அவர் செல்லும்
அழகை ஊரே வியந்து பார்க்கும்...

மண்ணைவிட்டு சென்று இருந்தாலும் எங்கள்
மனதை விட்டு செல்லவில்லை...
அப்பா என்ற ஆலமர நிழலில் இருந்தவரை,
வாழ்க்கை என்னும் வெயில் எங்களைச் சுட்டதே
இல்லை...
நீங்கள் எங்களோடு இல்லாத ஒவ்வொரு
நொடியும் புரிகிறது, உங்கள் நிழலில் நாங்கள்
எவ்வளவு பாதுகாப்பாக இருந்தோம் என்று...
எந்தவொரு நன்னாளிலும் ஊருக்கே வயிறார
விருந்து கொடுத்தீர்கள்...
இன்று உங்கள் நினைவு நாள் நாங்கள் உங்
களை நினைத்து நீங்கா துயர் கொண்டோம்...
எங்களை விட்டு சென்றதேனோ?...
இரண்டாம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். (2488)

ஐயனார் கோயில் வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி - கேதீஸ்வரி சந்திரலிங்கம்
பிள்ளைகள் - சிந்துஜா, அமுதினி, சிறிசரண்யா

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5989)

076 825 7716 (ஆகாஸ்)

வேலையாட்கள் தேவை

தாரணி சுப்பர் மார்க்கெட்

இல.758, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

- HR Manager (ஆண்/பெண்)
  மனித வள முகாமையாளர் (முழுநேரம் அனுபவம் உள்ளவர்கள்)
- Delivery Boys (விநியோகம் செய்பவர்கள்)
  (அனுபவம் உள்ளவர்கள், மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் வேண்டும்)
- Store Keeper (களஞ்சிய முகாமையாளர் - ஆண்)
  (அனுபவம் உள்ளவர்கள்)
- Cashier - காசாளர் (ஆண்/பெண்)
  (அனுபவம் உள்ளவர்கள்)
- இரவு நேர பணியாளர்
  Night Shift Workers (ஆண்)
- Cleaner தூய்மைப்பணியாளர்
  (ஆண்/பெண்) (அனுபவம் உள்ளவர்கள்)




சுயவிபரக்கோவையினை Tharanysm@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி அல்லது 077 199 7206 எனும் தொலைபேசி (வாட்ஸ் அப்) இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்,
தாரணி சுப்பர் மார்க்கெட்
No.758, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

(2490)

# மரண அறிவித்தல்



## முருகேசு விநாயகமூர்த்தி

பிறப்பு 07.09.1947 மறைவு 05.07.2026

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு விநாயகமூர்த்தி அவர்கள் கடந்த 05.07.2026 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தியாகராசா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் சுஜேதா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பூபதி சுப்பிரமணியம், கந்தசாமி, பகவதி மற்றும் இராமுப்பிள்ளை, சேதுபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சியாமளா, மகேந்திரன், ஸ்ரீலதா, முரளிதரன், சசிதரன், சசிலேகா ஆகியோரின் மைத்துனரும் கவிதா, கணாதீபன், கஜானா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ரமேஸ், ஜீவரஜனி, ஆதவன் ஆகியோரின் மாமனாரும் சகானா, விகாஸ், அவிக்னன், ஆர்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2026) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீலியம்பனை,
மல்லாகம்.

(2491)

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல. 131 [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media